மாதர் மனோரஞ்சினி.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்.—ஔவையார்.

VOL. 2.	MADRAS: JULY 1900.	No. 5.
புத்த. உ.	சென்னப்பட்டணம், 1900 - ௵ ஜுலை-மீ.	இல. ரு

கரடி.

முதல் எட்டிலுள்ள படத்தில் பாடசாலையில் கரடிகள் விளையாடுதலைக் காட்டியிருக்கிறது. பையன்களிலொருவன் ஸ்தம்பத்தின் மேல் உட்கார்ந்திருக்கும் ஒரு கரடியைக் குச்சியால் விளையாடத்தூண்டுகிறதைப் பாருங்கள். நம்மிந்தியாவில் சாதாரணமாக கரடியைப் பிடித்துக்கொண்டுவந்து தெருவில் ஜனங்களுக்கு வேடிக்கை காட்டி சிலர் பிழைக்கிறார்கள். இவர்கள் பாடசாலைகளிலும் கரடிகளை அழைத்துக்கொண்டுபோய் பிள்ளைகளும், பெண்களும், பார்த்து ஆநந்திக்கும்படி அநேகவித ஆட்டங்களை ஆடும்படி செய்வித்து வெகுமானம் பெறுவதும் உண்டு. கரடியானது நாய், பூனை இவற்றைப்போல வீட்டில் சகஜமாய் வைத்துவளர்க்கும் மிருகமல்ல; இது சிங்கம், புலி, ஓநாய் இவைகளைப்போல் கொடியமிருகங்களில் ஒன்று. ஆனால் அவைகள் மாமிசங்களைப் புசிக்கும். இக்கரடி ஜாதியில் பெரும்பான்மையானவை மாமிசங்களைப்புசியாமல் காய் கிழங்குகளைத் தின்று ஜீவிக்கும். இது அதிக சுறுசுறுப்புள்ள ஜெந்துவல்லவாகையால் அதிக வேகமாக ஓடாது. புலி, பூனை நாய் முதலிய ஜெந்துக்கள் குதிகாலால் நடக்கின்றன. கரடியோ மனிதனைப்போல் பாதம் முழுவதும் பூமியில் பொருந்தும்படி நடக்கும். இப்படி நடப்பதால் தான் இவைகள் மிருகங்களையோ மனிதர்களையோ எதிர்க்கும்போது முன்னங்கால்களால் அழுந்தப்பிறாண்டும். இதனுடைய கால்களில் கத்தியைப்போன்ற கூர்மையான நகங்கள் உண்டு. மழை காலத்தில் இந்நகங்களின் உதவியால் பூமியில் ஓர் குகையைப்போலத் தோண்டிக்கொண்டு அதில் வசிக்கும். இது ஒரு மரத்திலிருந்து இன்னொருமரத்துக்கு அதிகவிரைவாகத்தாவும் படியான அவ்வளவுபலம் பொருந்தியது. மனிதர்கள் இதைத்தொந்தரை செய்தாலன்றி இது ஒருவரையுந் தொந்தரை செய்யாது. இது மனிதரைக் கொல்லவேண்டி நேரிட்டால் தன் முன்னங்காலால் தலையில் ஒரு அறை

அறையும். அதற்குத்தப்பிவிட்டால் அவர்களைப்பிடித்து இறுக்கிக்கொன்று விடும்.

இக்கரடி ஜாதிகளில் மூன்றுவிதம் உண்டு. ஒன்று கபிலநிறமுள்ளது. இது ஆசியாக்கண்டத்தில் ஸைபீரியா, காமஸ்கட்கா, ஜப்பான் தேசங்களிலும் வடஅமெரிக்காவிலும் இருக்கிறது. இது மாமிசபட்சணியாயிருந்தும் காய், கிழங்கு, பழம், சிறு செடி முதலியவைகளை அதிகமாகப் புசிக்கும். மழைகாலத்தில் அதிகமாகத்திரியாமல் தூங்கிக்கொண்டே காலத்தைக்கழிக்கும்.

இரண்டாவது :—அமெரிக்காக் கண்டத்திலுள்ள கறுப்புக்கரடி. இது கபிலவர்ணமுள்ள கரடியைப்போல பெரிதாயிராமல் சிறியதாயிருக்கும். கறுப்புக்கரடிகள் அமெரிக்காவிலுள்ள காடுகளிலும், மலைகளிலும் இருக்கின்றன. இவைகளின் உரோமங்கள் முற்காலத்தில் அதிகமாக மதிக்கப்பட்டு வந்ததுடன் தோல்கள் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டும் வந்தன. இப்போது இத்தோல்களால் இராணுவங்களுக்கு வேண்டிய கத்தி, துப்பாக்கி முதலிய ஆயுதங்களுக்கு உறைகள் செய்யப்படுகின்றன.

மூன்றாவது :—துருவத்துக்கடுத்த குளிர்ச்சியான பாகங்களில் இருக்கும்படியான கரடிகள். இவைகள் மிருகங்களையும், சமுத்திரத்திலுள்ள சுறா, திமிங்கிலம் முதலிய பெரியமீன்களையும் புசிக்கும். இதனுடைய உரோமமானது மஞ்சள் பொட்டுடன் வெண்மை நிறமாயிருக்கும்.

1885-ம் வருஷத்தில் இந்தியாவில் கபிலவர்ணமுள்ள கரடிகள் சுமார் 100 ஜனங்களையும், 380 ஆடுமாடுகளையும் கொன்றனவாம்.

இங்கிலாந்தில் ஸ்திரீகளின் நிலைமை. *

இங்கிலாந்தில் ஸ்திரீகளின் நிலைமையானது அவரவர்கள் அந்தஸ்துக்குத்தக்கபடி வித்தியாசமாகத் தானிருக்கும். உதாரணமாக ஏழைகளாயிருக்கும் வேலைக்கார வகுப்புகளைச் சேர்ந்த ஸ்திரீகள் மிகக்கடினமாக உழைப்பார்கள். அங்கே ஒரு கூலிக்காரப் பெண்பிள்ளை தன் புருஷன் அயலூரிலிருந்தால் காலைமுதல் சாயங்காலம் வரை கஷ்டப்பட்டு உழைத்

* திருச்சினாப்பள்ளி எஸ். பி. ஜி. காலேஜ் தலைமை உபாத்தியாயர் ரெவரண்டு G. H. ஸ்மித் எம். ஏ., என்பவர் இங்கிலீஷில் செய்த பிரசங்கத்தை இங்கே தமிழில் மொழிபெயர்த்திருக்கிறோம்.

துக்கூலி ஜீவனம்செய்து தன் சம்சாரத்தைக் காப்பாற்றவேண்டியிருக்கும் இதற்கு மேல் தான் அவள் வீட்டுவேலைக்கும் குழந்தைகளைச் சவரட்சணை செய்யவும் சாவகாசம் கிடைக்கும். கலியாணமாகாதவளாய் இருந்தால் அவள் நிலைமை இன்னும் கடினமாயிருக்கும். ஏனெனில் தொழிலாளிகளுக்குக் கூலி நிரம்பக்கிடைக்கும் படியான வேலை அகப்படுவது கஷ்டம் ஆகையால் அநேகர் தையல் வேலையினால் ஜீவனம் செய்வார்கள். அதில் வரும்படி மிகக்கொஞ்சம்.

மேலும் நடுத்தர அந்தஸ்துள்ளவர்களைப்பற்றி யோசிப்போமானால் அவ்வகுப்பு ஸ்திரீ தனது அந்தஸ்துக்குத் தக்கபடி ஏதாவது வீட்டுவேலை செய்வாள். ஆனால் செல்வவான்கள் வீட்டில் ஸ்திரீகளுக்கு குடும்பத்து மேல் விசாரணையைவிட வேறுவேலை கிடையாது. கடைசியாக பிரபுக்கள் வீட்டு ஸ்திரீகளோ வென்றால் வீட்டிற்கு எஜமானிகளாயிருப்பதுடன் கூட, சமையல் காரர்கள், காரியஸ்தன், முதலிய பலவேலைக்காரர்களுடைய வேலைகளை மேல்விசாரணை செய்து கொண்டிருப்பார்கள். ஆகையால் செல்வம் மிகுந்த பிரபுக்கள் வீட்டு ஸ்திரீகளுக்கு மிக சுலபமான மேல் விசாரணையைவிட வேறுவேலை ஒன்றுமில்லை. இவர்களைத் தங்கள் கீழிருந்து வேலை செய்யும் ஆண்பெண் இரண்டுவகுப்பு உத்தியோகஸ்தர்களை ஆளும் சிற்றரசிகளென்று சொல்லலாம்.

இது நிற்க, நமது பிரசங்கத்திற்கு இங்கிலாந்தில் நாட்டுப்புறத்தில் பூஸ்திதி நிறைந்துள்ள ஓர் செல்வக்குடும்பத்தைச் சேர்ந்த ஸ்திரீகளை உதாரணமாக எடுத்துக்கொள்வோம். இக்குடும்பமொன்றில் பிறந்த ஒரு ஸ்திரீயைப்பற்றி இங்கு விஸ்தாரமாகச் சொல்வோம். அவள் குழந்தைப் பருவத்தில் மிக சந்தோஷமாகவும் உற்சாகமாகவும் காலத்தைக் கழிப்பாள். தன்னுடைய சகோதரர்,சகோதரிகளுடன் குதிரை சவாரிசெய்தும், பந்து முதலிய விளையாட்டுகளாடியும், நல்ல காற்று உட்கொண்டு தகுந்த தேகப்பயிற்சியடைவாள். வேட்டையாடும் மைதானங்களில் இச்செல்வவான்கள் வீட்டு யௌவனப்பெண்கள், சுவர்ணம் போன்ற தங்கள் கூந்தல் காற்றிலுலாவ, வேகமான குதிரைகளின் பேரில் கம்பீரமாக சவாரி செய்வதையும், அவர்கள் பின்னே அவர்கள் வீட்டைச்சேர்ந்த ஒரு கிழட்டு வண்டிக்காரன் அல்லது மற்ற வேலைக்காரன் சுறுசுறுப்பான அப்பெண்களின் சகோதரர் சகோதரிகளைக் கூட்டிக்கொண்டு பின்தொடர்வதையும் அடிக்கடி பார்க்கலாம். இதைவிட அழகான காட்சி வேறென்ன விருக்கிறது! இங்குமங்கு மோடியுபத்திரவம் செய்யும் தன் குஞ்சுகள் எங்கே குளத்திற்குள்ளே இறங்கிவிடுமோ வென்று கவலைப்படும் தாய்க்கோழியை

ப்போல் அங்குமிங்குமோடுகிற அவர்களைப்பின்தொடர்ந்து அவன் அலைந்து கொண்டிருப்பான். அயலோர்களிடத்தில் தன் எஜமானன் குழந்தைகளுடைய பயமின்மையையும் துஷ்டத்தனத்தையும் பற்றித்தானே புகார் சொன்னாலும், அதனாலவன் அவர்களைக் குறித்துப் பெருமையடைவானே யொழிய மற்றவர்கள் குற்றம் சொன்னால் பொறுக்கமாட்டான்.

இவ்வளவு உற்சாகமாக அந்தப்பெண் தன் பாலியபருவத்தைக் கழிப்பாள். பிறகு தன்னூருக்கு சற்று தூரத்திலுள்ள ஒரு (Boarding School) * போஷண பாடசாலைக்கு மற்றப்பெண்களுடன் படிக்கப்போவாள். அப்பள்ளிக்கூடங்களில் இந்து தேசத்து பாடசாலைகளில் பெண்கள் கற்பது போலவே வாசகம், கணிதம், பூகோளம் முதலிய பாடங்களைக்கற்பதுடன் தேகப்பயிற்சியும் செய்துகொள்வாள். இப்போதுதான் கொஞ்சகாலமாக ஸ்திரீகளுக்கும் பள்ளிக்கூடங்களில் மற்றப்பாடங்களுடன் தேகப்பயிற்சியும் கற்பிக்கவேண்டியது அவசியமென்று சட்டமுண்டாயிருக்கிறது. ஆகையினால் இங்கிலாந்தில்பிள்ளைகள் போலவே பெண்களும்டெனிஸ் (Tennis), ஹாகி (Hockey), காலடிப்பந்து (Foot-ball) முதலிய விளையாட்டுகளைப் பயில்வார்கள். ஆகையால் ஒவ்வொரு பெண்ணுக்கும் கல்வியால் புத்தி விசாலிப்பதுடன் கூட தேகமும் திடமாக வளரும்.

இப்படி 17, 18 வயது வரையிலும் அவள் பள்ளிக்கூடத்தில் படிப்பாள். அப்படிப்பு முடிந்த பிறகு அவள் கலியாணம் செய்துகொள்ள எத்தனிப்பாள். ஆனால் அச்சீமையில் மாப்பிள்ளைகள் அகப்படுவதுஅபூர்வமாகையால் ஒவ்வொருபெண்ணும் கலியாணம் செய்துகொள்ளமுடியாது. ஆகையால் இத்தேசத்திலிருப்பது போலல்லாமல் அச்சீமையில் அநேக ஸ்திரீகள் பருவமானபிறகு கலியாண மின்றியிருப்பது சாதாரணம். இப்படிக்கன்னிகையாகவே யிருக்கப்பட்ட பெண்கள் தாங்களே உத்தியோகங்களில் அமர்ந்து திரவியம் சம்பாதிப்பார்கள். இப்படி அநேகர் தந்தி, தபால், டைப்ரைடிங் முதலிய ஆபீசுகளில் உத்தியோகம் செய்வதைக் காணலாம்.

* இங்கு பிள்ளைகளுக்கு போசனமளிக்கப்படும். போசனத்திற்காகவும், படிப்புக்காகவும் மாதம் ஏற்படுத்திய சம்பளம் பெற்றோர்கள் கொடுக்கவேண்டும். பிள்ளைகள் வெளியிற்போக வேண்டுமானால் உபாத்தியாயர் உத்தரவு பெற்றுக்கொண்டுதான் போகவேண்டும். உபாத்தியாயர்கள் பிள்ளைகளைக்கூட்டிக்கொண்டு உலாவுவதற்கும் விளையாடுவதற்கும் வெளியிற்போவதுமுண்டு. அநேகமாக இதேமாதிரி சென்னையில் ஸ்டேன்ட்ஸ் ஹோஸ்டல் என்று புதிதாக ஓர்கட்டிடம் கட்டப்பட்டு அங்கு அநேகபிள்ளைகள் இருக்கிறார்கள். இவர்களைமேற்பார்வை பார்த்துவர டாக்டர் போர்ன் என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

நாட்டுப்புறத்து தனவந்தர்கள் வீட்டுப்பெண்கள் கலியாணம் செய்து கொண்டு சம்சாரம் செய்வார்கள். அவர்கள் தங்களை அண்டியிருக்கும் ஏழை ஜனங்களுக்கு உதவியாயிருப்பார்கள். அவர்கள் தங்கள் வீட்டுக் காரியங்களைக் கவனிப்பதுமல்லாமல் ஆசார சீர்திருத்த விஷயங்களிலும் அதிக சிரத்தையெடுத்துக் கொள்வார்கள். அத்தேசத்தில் குழந்தைகளுள்ள ஸ்திரீகளுக்கு அவரவர் கடமைகளை நன்குணர்வதற்காக ஏற்பட்டிருக்கும் தாய்மார் சங்கத்தில் அவர்கள் மெம்பர்களாயிருப்பார்கள். அல்லாமலும் கன்னிப்பெண்கள் உபகார சங்கத்திலும் மெம்பர்களாவார்கள். இக்கன்னிப்பெண்கள் உபகாரசங்கம் மிகப்பெரிது. அதன் கிளைச்சங்கங்கள் இங்கிலாந்து முழுமையும் பரவியிருக்கின்றன. அவைகளிற் செய்யும் வேலையாவது பாலியஸ்திரீகள் நல்ல உத்தியோகம் சம்பாதிக்க உதவி செய்வதும், பிறகு அவர்கள் வழிபிசகாமலிருக்கும்படி பாதுகாத்தலுமேயாம்.

மேலும் இங்கிலாந்து ஸ்திரீகள் பொது ஜன மீடிங்குகளிலும் சிரத்தையெடுத்துக் கொள்ளுவதுண்டு. உதாரணமாக, நான் சென்ற தடவை இங்கிலாந்துக்குப் போயிருந்தபோது ஒரு ஸ்திரீ ஒரு மணி நேரம் வரையில் அதிக புத்திசாலித்தனமும் விவேகமுமுள்ள பிரசங்கம் செய்யவே அதை கல்வி கேள்விகளில் தேர்ச்சியடைந்த கலைஞர்களும் மிகப்பக்தியுடன் கேட்டுக்கொண்டிருந்தார்கள். இதைத்தவிர தங்கள் வீட்டுவேலை செய்த பிறகு அதிக சாவகாசமிருப்பதனால் அத்தேசத்து ஸ்திரீகளிலநேகர் இராஜரீக விஷயங்களிலும் சிரத்தை யெடுத்துக்கொள்வார்கள். ஆகவே அவ்விடத்தில் ஸ்திரீகள் ஸ்கூல கமிடிகளிலும், தாலூகா போர்டுகளிலும் மெம்பர்களாயிருப்பது சாதாரணம். இதைத்தவிர ஸ்திரீகள் பொது நன்மையுள்ள வேலைகளை மேல் போட்டுக்கொண்டு உழைப்பார்கள். ஸ்திரீகள் இப்பேர்க்கொத்த விஷயங்களில் என்ன செய்யக்கூடுமென்று நீங்கள் நினைக்கலாம். அதுஅப்படியல்ல. ஸ்திரீகள் தங்கள் புத்திசாலித்தனத்தால் எக்காரியமும் செய்யக்கூடும்.

(இன்னும்வரும்).

C. K. வேங்கிடகிரி சாஸ்திரியார். பி. ஏ.

ஓர் சம்பாஷணை.

கிரிஜாம்பாள்:—கிருபாவதி, கிருபாவதி, எங்கேயிருக்கின்றாய் ?

கிருபாவதி:—கிரிஜா! வருக; இதோ இருக்கின்றேன்.

கிரி:—என்ன வீடெல்லாம் கொள்ளையிட்டாலும் தெரியாதுபோலிருக்கிறதே! இந்த மூலையில் இருந்துகொண்டு என்ன செய்கிறாய்?

கிரு:—ஒன்றுமில்லை, இருப்பிடம் தனிமையாகில் அறிவு பல்வழிச்சிதறாமைக்கு அநுகூலந்தானே.

கிரி:—கோழி முட்டையிட்டால் அவையங் காக்கிறதென்று சொல்வார்கள். அதுபோல் இருக்கிறதேயென்றுதான் கேட்டேன். ஒன்றுமிலலை யென்கிறதைப்பார்த்தால் நானறியக்கூடாத இரகசியமாயிருக்கலாமெனக் காண்கிறது.

கிரு:—கிரிஜா! அங்ஙனமொன்றுமில்லை. இப்புத்தகத்தினைக் கண்ணுற்றிருந்தேன்.

கிரி:—புஸ்தகமா, முப்பதுநாழிகையும் இதுதான் வேலை. வாய் நிறைந்தபாடா, வயறு நிறைந்தபாடா, இதே பயித்தியமாய் விட்டது.

கிரு:—புன்னகையுடன் நன்று புகன்றாய் உன் பேச்சாலன்றி யார் பேச்சாலுமெனக்கு நகைப்பெழுவதில்லை.

கிரி:—ஆம்! ஆம்!! இப்பொழுது சிரிப்பாகத்தானிருக்கும்.

கிரு:—இதென்ன, இப்பொழுது சிரிப்பாகத்தா னிருக்குமென்பதைப்பார்த்தால் பின்னிட்டு ஏதோ? துன்பம் வருமென எச்சரிக்கிறாய்போலிருக்கிறதே அதென்ன? அம்மா.

கிரி:—அதிருக்கட்டும் இதெல்லாம்தானா குடித்தனத்திற்கு அங்கம்?

கிரு:—கிரிஜா, என்ன பேதமையாய் வசனிக்கின்றாய்! படிப்பினால் கிருகக்கிருத்தியத்திற்கு நேர்ந்த இடையூறென்ன?

கிரி:—என்ன கெடுதிவேணும். பத்துப்பெயருக்கு இட்டு எடுத்துச் செய்யமாட்டுவையா, பெண்ணாய்ப் பிறந்தவர்கள் வைத்த பாரந் தாங்கியாய் நிற்காமல் வேலை செய்தாலன்றோ பெருமை.

கிரு:—ஓ அப்படியா, இவ்வெண்ணங் கொண்டுதானோ நீ எப்பொழுதும் படிப்பை வெறுக்கின்றாய், நல்ல யுக்தியே ஆயினும் வைத்தபாரந் தாங்கக் கருங்கற்றா ணிற்கும் வலியில்லாது சில சமயம் இடையில் முறிகின்றதே. மெல்லியலாரென வலுவின்மைக் கறிகுறியாகக் கூறப்பெறும் பேதைப்பெண்பாலினைச்சேர்ந்த யானெங்ஙனம். அக்கல்லினும் வலிய தன்மையுடையவளாவேன். ஆயினும் என் தேகவலுவிற்கும், நான் செய்யக் கடமைப்பட்டிருக்கும் பொறுப்பிற்கும் இன்றளவும் ஒரு தவக்கமும் நேர்ந்திலது.

கிரி:—நீ என்ன சொன்னாலுமென்ன, தேய்ந்த கட்டைதான் மணம் பெறும்.

கிரு:—என்ன, உபமான உபமேயங்களெல்லாம் நவநவமாகவிருக்கிறதே! தேய்ந்தால் மணம் பெறும் சந்தனகட்டைக்கும், தேய்ந்தால் நிணம் பெறும் சரீரக்கட்டைக்கும் என்ன சம்மந்தம் என்ன பொருத்தம் உனக்கென்று முன்னோர் எழுதிவைத்த மகளீரிலக்கணத்தில் கூறப் பட்டுளதோ? இவைகளெல்லாம்.

கிரி:—நானென்ன உன்போல இலக்கணமா படித்திருக்கிறேன், என் வார்த்தை எதற்கு உதவும்.

கிரு:—கிரிஜா நாமிருவரும் நெடுநாளைய தோழியாயிற்றே, வேடிக்கையாய்ப் பேசினால் கோபமென்ன?

கிரி:—கோபமுமில்லை தாபமுமில்லை, பிடித்தால் பிடிவாதமாய் நீதான் பேசுகிறாய்,

கிரு:—கிரிஜா, யாரோ வருகிறதுபோலிருக்கிறது, யார் பார்.

கிரி:—ஒருவருமில்லை. எதிர் வீட்டுப் பாட்டியம்மாள் தான், வாருங்கள்.

கிரு:—உட்காருங்கள் அம்மா, ஏது இவ்வளவு தயவு

கண்டகி:—என்னமோ இரண்டு நாழிகையாய் பேச்சுக்குரல் கேட்டதே. இதேது, புதிதாயிருக்கிறது பார்ப்போமென்று தான் வந்தேன்.

கிரி:—நான் வந்து என்னமோ வம்பளந்துகொண்டிருந்தேன், நல்ல சமயத்தில் நீங்களும் வந்தீர்கள்.

கண்:—அதென்ன சமயம் விசேஷமிருக்கிறதுபோலிருக்கிறதே.

கிரி:—வேறொன்றுமில்லை, கிருபாவதி எப்பொழுது பார்த்தாலும் படித்துக்கொண்டிருக்கிறாயே நறுக்கிட நாலு காரியம் செய்யத்தெரியவேண்டாமா? என்று கேட்டேன். அவள் அதற்கு யானென்ன செய்யவில்லை, என் குடும்பத்தை யானுக்கும் தாங்குகிறேன், என்று ஜம்பம் பேசுகிறாள். இதுதான் நடந்தது.

கண்—நன்றாயிருக்கு கிருபாவதி காரியத்தை அவளே தான் மெச்சிக்கொள்ளவேண்டும். ஆழாக்கு அரிசி கொதிக்குமோ, அதுவும் அவன் வேலையோ, நாலு ஒத்தாளும் ஓர்ப்படிமாரும், மாமியாரும், நாத்தனாரும், மச்சினமாரும் வீட்டில் நிக்க நிலைகொள்ளவில்லை, சமுத்திரம் தான் இந்த குடும்ப நிர்வாகம்.

(இன்னும் வரும்.)

அசலாம்பிகை அம்மாள்.

ஸிம்பலீன்.

இயாக்:—மோதிரத்தை வைக்கப் பயப்படுகிறாயா? கூடியமட்டிலும் நீ புத்தியுள்ளவன்தான். உன் மனைவியை வாங்க எவ்வளவு பவுன் கொடுத்தாலும் அவள் களங்கமற்றிருப்பாளென்று நினைக்க வேண்டாம்.

பாஸ்து:—நீ இப்படி சொல்லுகிறது உன்னுடைய வழக்கம்போலிருக்கிறது. வாஸ்தவமாய்த்தான் சொல்லுகிறாயா?

இயாக்:—எனக்கும் பைத்தியம் பிடிக்கவில்லை. நான் சொல்வதை பூராவு மாலோஜித்துத்தான்சொல்லுகிறேன். ஆணையிடுகிறேன்.

பாஸ்து:—அப்படியா! இம்மோதிரத்தைத் தருகிறேன் நீ யிங்கேதிரும்பி வருகிறவரையில் இதைவைத்துக்கொள் இதைப்பற்றி உடன்படிக்கை யெழுதுவோம். என்பத்தினி எல்லாரிலும் அதிக குணவதியென்று சொல்லுகிறேன். மோதிரத்தை எடுத்துக்கொள். இந்தப் பந்தயத்துக்குக் கொஞ்சமாகிலும் பயப்படவில்லை.

பிலாரியோ:—பந்தயம் வைக்க எனக்குச்சம்மதமில்லை; விட்டுவிடுங்கள்.

இயாக்:—உன் பத்தினி என்னையதிக ஆதரவோடு உபசரிக்கும்படி நீ ஒரு கடிதம் தந்து, நான் அவள் கற்பையழித்தால் உன்னுடைய மோதிரத்தையும் என்னுடைய பணங்களையும் நான் எடுத்துக்கொள்வேன். நீ அதிகவிசுவாசத்துடன் நினைத்துக்கொண்டிருக்கிற பதிவிரதா தருமத்தைக்கெடுக்க முடியாமல் திரும்பிவருவேனானால் உன்னுடைய மோதிரத்தையும் இந்தப் பணத்தையும் நீயே யெடுத்துக்கொள்ளலாம். நிச்சயம்! நிச்சயம்!!

பாஸ்து:—நீ சொன்னதையெல்லாம் சம்மதித்தேன் ஆனால் ஒரு வார்த்தை சொல்லுகிறேன் கேள். நீ அவளுடைய கற்பையழிக்க பிரவேசித்து, அதையழித்துச் சரியான அடையாளங்கள் கொண்டுவந்தால் நான் உன்னுடைய விரோதியல்ல; அவளைப்பற்றியும் நாம் பேசவேண்டாம். அல்லாமல் அவள் கற்புவிஷயத்தில் சிறிதேனும் மாறுமலிருந்தால், நீ கற்பையழிக்க ஏற்பாடுசெய்து அவளை ஆபத்துக்குள்ளாக்கினதற்காகவும், அவளைப்பற்றி இழிவான அபிப்பிராயத்தை நீ கொண்டதற்காகவும், கத்தியைக்கையில் பிடித்து நீ சமாதானஞ் சொல்லவேணும் (என்கூட வாளையேந்திச் சண்டைசெய்யவேணும்) தெரிந்ததா?

இயாக்:—கையைக்கொடு. இதைத்திரும்ப ஆலோஜித்துப் பின்வாங்குவதற்கு முன்னே உடன்படிக்கையெழுதி நான் ப்ரிட்டன் தேசத்துக்

குப்போகவேணும். நான் பணத்தைக்கொண்டு வருகிறேன். உடன் படிக்கையில் இதை யெழுதுவோம்.

பாஸ்து :—' சம்மதித்தேன்,' என்று சொல்ல, கடன் உடன்படிக்கை ஒன்று எழுதி சாக்ஷியுடன் கையெழுத்து வைத்தார்கள். பிறகு இயாக்கிமோ இமொஜனிருக்கிற இடத்துக்குப் பிரயாணமாய்ப்போனான்.

இப்படியிருக்க, ஒருநாள் இமொஜன் தன் அறைக்குள்ளிருந்துகொண்டு பின்வருமாறு தன் மனதுக்குள்ளே நினைத்துக்கொண்டாள். ஐயோ, தெய்வமே! என்ன செய்வேன்! உரலுக்கு ஒரு பக்கததில் இடி, மத்தளத்திற்கு இருபக்கத்திலிடியென்று சொல்லுவார்கள்; நானோ மூன்று பக்கத்திலிடிபட்டுக்கொண்டிருக்கிறேன்; கொடூரமான என் தகப்பன் ஒரு பக்கத்தில் கஷ்டப்படுத்துகிறான்; வஞ்சகமுள்ள என் சிற்றன்னை மற்றொருபக்கத்திலிருந்து துன்பம் செய்கிறாள். ஒரு வேளை முதல் இரு துன்பங்களைச் சகிக்கலாம்; மூன்றாவது கஷ்டத்தை யென்னால் சகிக்க முடியவில்லையே! என் பர்த்தாவை நாட்டைவிட்டுப் போகும்படியாகச் செய்த முட்டாளும் துரோகிபுமாகிய க்ளோட்டன் என்பவன் என்னைக் கலியாணம் பண்ணிக்கொள்ளவேணுமென்று பலமுறை கஷ்டப்படுத்துகிறானே! என்னால் சகிக்கமுடியவில்லையே! ஏ பர்த்தாவே! மேற்சொல்லிய மூன்றுதுன்பங்களை யொருவேளை சகித்தாலும், நீ நாட்டைவிட்டு என்னைப்பிரிந்து போனதை நினைக்கிறபோது என்மனம் வெயிலிற்பட்ட புழுப்போல வாடித்துடிக்கிறதே! என் பிராணநாதா! உன்மனம் கொஞ்சமாகிலும் இறங்கவில்லையா! வீணால் வருத்தப்படவேண்டாமென்று எப்பொழுது வந்து சொல்லப்போகிறாய்! திருடர்கள் என் சகோதரர்களைக் கவர்ந்து கொண்டு போனதுபோல என்னையுங் கொண்டுபோயிருந்தால் எவ்வளவு பாக்கியசாலியாயிருப்பேன்! மேலான பதவியிலிருக்கிறவர்களையும், அப்பதவியையடைய விரும்புகிறவர்களையும்போல, துர்பாக்கியமுள்ளவர்களொருவருமில்லை. எவ்வளவு இழிவான குலத்தில் பிறந்து கெட்ட ஸ்திதியிலிருந்தாலும், தங்களுடைய எண்ணங்கள் நிறைவேறினால் அவர்களைப்போல அதிர்ஷ்டமுள்ளவர் வேறேயொருவருமில்லை, என்று தனக்குள்ளே ஆலோசித்துக் கொண்டிருக்கையில், பிஸானியோ அங்கேவந்து ரோமாபுரியில் தன்னுடைய எஜமானனிடத்திலிருந்து ஒரு கனவான் கடிதங் கொண்டுவந்திருக்கிறதாகச் சொல்ல, இமொஜன் அவனை வரச்சொன்னாள். அங்கேவந்தவன் வேறு யாருமல்ல, மேற்கூறிய இயாக்கிமோவே. அவனைக் கண்டவுடன் கடிதத்தைக்கொடுக்க வாங்கிக்கொண்டு வந்தனமளித்தாள்.

வி. கோபால ஐயங்கார் பி. ஏ.

புற்புலத்து நெட்டிலிங்கமையர் வைபவம்.

(77-ம் பக்கத்தொடர்ச்சி).

வக்கமையர் அக்காலம் புற்புலத்திலிருந்த வறிய அந்தணர்களின் மூல புருஷனாகச் சொல்லப்படுகிறார். அவரிடமிருந்து உதித்த குடும்பங்கள் பல. அவைகளில் சில தணற்கால் என்னும் கிராமத்தில் பிரபலமாய் விளங்குகின்றன. யாது காரணத்தாலோ புற்புலத்திய அந்தணர்கள் வறியர்களாய் விட்டார்கள். நமது கதை துடங்கும் காலத்தில் வக்கமையர் வமிசத்திய ஐந்தாவது தலைமுறையைச் சேர்ந்த அந்தணர்கள் நான்கு குடும்பங்களாய்ப் புற்புலத்தில் வசித்து வந்தார்கள். அவர்கள் குடியிருந்த அக்கிரகாரம் கீழ்மேலாய் நான்கு வீடுகளடங்கியதாயிருந்தது. கணக்குக்குவீடுகள் பத்து, பதினைந்து காணப்பட்டன. சில வீடுகள் பாதி சரிந்திருக்கும். சில நாணற் கூறையில் புல் முளைத்து மூடப்பட்டிருக்கும். சிலவற்றில் திண்ணையில் முட்கிறையும் சப்பாத்தும் முளைத்து திண்ணைக்குமேல்முகட்டில் கூறையில்லாமல் கதவு மூடப்பட்டிருக்கும். உபயோகத்திலிருந்த நான்கு வீடுகள் இந்தப் பாழ்வீடுகளுக்கு மத்தியில் தங்கள் தசையும் எப்பொழுது அயல் வீடுகள் மாதிரி ஆய்விடுமோ என்று நடுங்கினவைகளாய் நிற்கும். அந்த அக்கிரஹாரத்தின் கூப்பிடுதூரத்தில் கீழ்பக்கத்தில் ஈசுவரன் கோவில் ஒன்றுண்டு. அந்தக் கோவிலின் பார்வையால் புற்புலத்தின் அக்கிரகாரம் பாழாய்விட்டது என்று அவ்வந்தணர்கள் சொல்லுவார்கள். அப்படி பாழாய்ப்போகும் கதியையறிந்து சில அந்தணர்கள் தணற்காலில் குடிப்போய் விட்டார்கள். போகாமல்நின்ற சிலர் தங்களுடைய வறுமையால் தணற்காலில் வீடு வாங்கிக்கொண்டுபோக யோக்யதையில்லை என்று துக்கித்தவர்களேயன்றி புற்புலத்தில் அபிமானத்தால் தங்கினவர்களல்ல. அவர்கள் வறுமையைப் பார்த்தால் எல்லாருக்கும் பரிதாபமாயிருக்கும். முதல் முதலில் நல்ல ஸ்திதியிலிருந்து பின்பு கஷ்டதசைக்கு வந்தவர்களாகையால் எப்பொழுதும் தங்கள் பூர்வதசையைக்குறித்துத் துக்கப்பட்டுக்கொண்டே இருப்பார்களேயன்றி அதை யகற்றி நல்ல ஸ்திதிக்குவரப் பிரயத்தனப்படமாட்டார்கள். பிராமண குடும்பமே அப்படி இருக்கிறது. ஒருவன் நல்ல ஸ்திதியிலிருந்தவன் என்றால் அவன் தன் பெண் குழந்தைகளுக்குத் தன் ஸ்திதிக்கு மேலான குடும்பத்தில் ஸம்பந்தத்தை நாடுவான். அப்படிநாடி அதை எப்படியாவது செய்து முடிப்பான். அப்படி முடிக்கும்வரையில், அவன் தனது தற்கால ஸ்திதிக்குக் கொஞ்சமேனும் ஒவ்வாத செலவுகள் செய்வான். அம்மாதிரி செலவு செய்தாற்றான் அவனிடம்

ஸம்பந்தம் செய்யவருகிறவனுக்கும் கௌரவமிருக்கும். குழந்தைகளை எவ்விதத்திலாவது நல்ல இடங்களில் கொடுத்துவிட்டால் போதும், நாம் கஷ்டப்படுவதுபோல் அவர்கள் கஷ்டப்படாமல் வாழ்ந்தாற்போதும், என்ற எண்ணத்துடன் என்னென்ன செலவு வந்தாலும் செய்வான். பாக்கியிருக்கும் இரண்டொரு காணிகளை ஒன்றுக்குப் பாதியாய் விற்பான். இம்மாதிரிகளான காரணங்களால் புற்புலத்து அந்தணர்கள் எல்லாரும் வறியரானார்கள். வறியராயினும் நன்றாய்ச் சாப்பாட்டுச் சுகமறிந்தவர்கள். என்ன கஷ்டதசைக்கு வந்தபோதிலும் அவ்வழியாய் வரும் பிராமணர்களுக்கும் மற்ற அதிதிகளுக்கும் அன்னம் இல்லை என்று சொல்லாதவர்களாய்ப் புசிப்பளிப்பார்கள். செலவுகள் அவர்களுக்குப் பலவிதமாக விருப்பினும் வரவு ஒரே விதந்தான். இரண்டொருகாணிகள் பாக்கி யிருந்தவைகளிலிருந்து வரும் மாசூலைத் தவிர அவர்களுக்கு வேறு வருமானம் இல்லை. அவர்களிவ்வளவு வறுமை நிலையிலிருப்பதைக்கண்டு புற்புலத்திய உடையான்கள் ‘பாப்பான் கறந்து குடிக்கட்டும்’ என்று இரண்டொரு எருமை பசு சிற்சில சமயங்களில் அவர்களுக்கு விடுவார்கள். அந்தணர்கள் தங்கள் ஊரை விட்டுப் போய்விட்டால் தங்களுடைய பெயருக்குக் குறைவு வருமென்று ஒழிந்த வேளைகளில் அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுப்பார்கள். தங்கள் கொல்லைகளில் பயிராகும் காய் கறிகளைக் கொணர்ந்து அளிப்பார்கள். தங்களால் கூடிய மட்டும் கண்டும் காணாமலும் எவ்வளவோ உபகாரஞ் செய்வார்கள். புற்புலத்திய அந்தணர்கள் தாங்கள் நல்ல ஸ்திதியிலிருந்த காலத்தில் உடையான்கள் தங்களிடம் வாங்கிப் புசித்தது போகத், தாங்களப்போது அவர்களிடம் வாங்கிப் புசிக்கும்படி ஆய்விட்டதே, என்று பெருமூச்சு விடுவார்கள். என்ன பண்ணுகிறது! பசியின் கொடுமை! அனுபவித்தவர்களுக்கல்லவோ அதின் வருத்தந்தெரியும்!

புற்புலத்திய அந்தணர்களுக்கும் உடையான்களுக்கும் ஒருவர்மேல் ஒருவருக்கு இருந்த அபிமானத்துக்குக் கங்குகரையேயில்லை. உடையான் என்னதான் பணக்காரனாகவிருப்பினும் ஒரு சிறு விஷயத்தைக்கூட தன் புத்தியின் பிரயோகத்தால் செய்ய முடியாதவனாகையால் ஐயனிடம் தேவதா விசுவாசம் வைத்தவனாகவும், ஒவ்வொரு சிறு விஷயத்துக்கும் ஐயரைக்கேட்டே நடக்கவேண்டியவனாகவும், ஐயரும் தன் ஊரைவிட்டு ஓடிவிட்டால் என்ன பண்ணுகிறது என்று ஏங்கினவனாகவுமிருப்பான். ஐயர் எவ்வளவு வறியராக இருப்பினும் உடையான் தனது பணக்கர்வத்தால் ஐயர் முன் தான் செருப்புப்போட்டு நடக்கமாட்டான். ஐயரைக்கண்டால் வெகு மரியாதையாய்த் தான் மேற்போட்டிருக்கும் போர்

வையை எடுத்து இடுப்பில்கட்டித்தான் பேசுவான். ஐயரைக் கண்டபோ தெல்லாம் "சாமி" என்று தலைமேல் கைதூக்கிக் கும்பிடுவான். 'என் சாமி! நீ எந்தெய்வமல்லவா! பாப்பான் இரண்டுபேர் நம்மூரிலிருந்தால் தானே சூரியன் கிழக்கே உதிப்பான்!" என்பான். நீ என்பது தான் உடையானுக்குத் தெரியுமேயல்லாது மரியாதைக்காக என்று நீங்கள் சொல்ல வேண்டுமென்பது அவனுக்குத் தெரியாது. அது ஒருவித இறுமாப்பா லல்ல. உடையானுக்கு தெரிந்த வித்தையும் மரியாதையும் அவ்வளவே. புற்புலத்திய அந்தணர்களும் உடையார்கள் தங்களிடம் இவ்வளவு அன்பு பாராட்டிவர அவ்வூரைவிட்டுப்போக யோசிக்குங்காலத்தில் சிற்சில சமயங்களில் மனதில்லாதவர்களாக இருந்தார்கள். அவர்களில் இரண்டு பெயர்கள் ஒரு நாள் பேசிக்கொண்டதை இங்கு சொல்லுவோம்.

அப்பு.—என்ன ஐயா ! நான் வெகுநாளாய்ச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். ஏதாவது கொஞ்சநெஞ்சம் இருக்கிறதை எடுத்துக்கொண்டு நாம் தணற்காலுக்குப் போகவேண்டியது தான். இந்தப்பாழும் ஊரில் என்ன இருக்கிறது. அந்த சிவங்கோவிலை அந்த இடத்தை விட்டு எடுத்துக் கட்டவேண்டும். அல்லது நமது அக்கிரகாரத்தை நாம் மாற்றிக் கட்டவேண்டும் நமக்கு இரண்டுக்கும் யோக்யதையில்லை. ஒரு நல்லது பொல்லாது எல்லாவற்றிற்கும் தணற்காலிலிருந்து தானே நமக்குவாத்தியார்வந்து ஆகவேண்டியிருக்கிறது. நேற்று அந்தக்கிழம் சீரங்காள் பிணம் விழுந்தது. தணற்கால் வைதீகன் வந்துதானே எடுக்கவேண்டியிருந்தது. இனி புற்புலத்தில் பெரியவாள் தேடிய கிராமம் என்று ஒட்டிக்கொண்டிருப்பதில் என்ன லாபம். இத்தனைநாள் நாம் ஒட்டிக்கொண்டிருந்தது போதுமே. இங்கே நமக்கு இனிமேல் என்ன இருக்கிறது.

ஐயா.—அப்படிச்சொல்லாதே அப்பு! இரண்டு காசு வீசி எறிந்தால் வைதீகன் எங்கு வா என்றாலும் வருகிறான். சும்மாத்தான் வருகிறானோ ! அவன் உபாத்யாயத்தை நடத்தவும் அவன் வருமானத்தைப் பெற்றுக்கொள்ளவும் வருகிறான். தணற்கால் தணற்கால் என்று எப்போதும் சாகுருவிமாதிரி சொல்லிக்கொண்டிருக்கிறாயே! தணற்கால் என்ன வாழ்ந்தது! என்னவோ அங்கே இரண்டு பெயரிடம் காசிருந்தால் நமக்கென்னயிற்று. இங்கேயாவது உடையான் ஏதாவது பாவ புண்யத்துக்குப்பயந்து நாம் கேட்காமலே மனப்பூர்வமாய்க் கொடுப்பான். அங்கு ஒரு குஞ்சுகூட அறுத்தகைக்குத் தடவச் சுண்ணாம்பு கொடுக்காது. ஒருவனுக்குப் பணமிருந்து நமக்கென்னயிற்று ?

என்ன அதிசயப்பணம்! நாம் கண்டதில்லையா. பணம் வெகு ஸ்திரமா ஆயிரமிருந்தாலும் பெரியவர்கள் தேடின ஊரைவிட்டு யார்தான் போவார்கள்.

அப்பு:—இருக்கட்டுமோ ! சிவன்கோவில் பார்வையிருக்கிறதே ! அதை நீ ஒன்றும் யோசிக்காமல் பேசுகிருயே !

ஐயா:—சிவன் கோவில் ! விஷ்ணுகோவில்! கோவிலென்னபண்ணும்! கற்புலம் நமது ஊருக்கு 2-மைலிலிருக்கிறது! அந்த ஊர் அக்கிரகாரத்துச்குச் சிவன் கோவில் நேர் எதிராகயிருக்கிறது. அவ்வூருக்குச் செங்குத்துப் பார்வை ! அந்த ஊர் என்ன கெட்டுப்போயிற்று ! ஏன் உனக்குப் பைத்தியம்! கோவில் என்னசெய்யும்! குளம் என்ன செய்யும்! நமது கருமத்துக்கு நாம் கோவிலையும் குளத்தையும் குற்றஞ்சொல்லி என்ன பண்ணுகிறது ! நமது பாவத்தை நாமே அனுபவித்துத் தீரவேண்டும்! நல்லது இதோ வருகின்ருன் பார், நெட்டிலிங்கம். அவனைக்கேள் உனக்குச் சரியான பதில் சொல்லுவான்.

இப்படி ஐயா சொல்லிமுடிக்கு முன்னே அங்கு அவர்கள் தாயாதியாகிய நெட்டிலிங்கம் என்ற மூன்ருவது அந்தணன் ஒருவன்வந்து சேர்ந்தான்

குடும்ப சம்ரக்ஷணை: ஜலம்.

1-ம் அதிகாரம்,

ஜலத்தின் உபயோகங்கள்.

ஜலமானது உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாத பஞ்சபூதங்களில் ஒன்ருகையால், மிகவும் முக்கியமாயுள்ள பதார்த்தம். சில ஜந்துக்கள் ஜகத்திலேயே வசித்துக்கொண்டிருக்கின்றன. சாதாரணமாய் ஜந்துக்கள் எல்லாம் அப்போதைக்கப்போது ஜலம் உட்கொள்ளாமலிருக்கமாட்டா. இப்படிக்குடிப்பது தம் உயிரைக் காத்துக்கொள்ளும் நிமித்தமே; ஏனெனில், நாம் புசிக்கும் ஒவ்வொரு வஸ்துவிலும் கொஞ்சமாகிலும் அதிகமாகிலும் ஜலம் கலந்திருந்தாலல்லது நாம் உட்கொண்ட ஆகாரம் ஜீரணமாகாது. மேலும் பால் முதலான சில வஸ்துக்களை நாம் குடித்து ஜீரணிக்கச்செய்து கொள்வதற்குக் காரணமென்னவென்ருல் அவ்வஸ்துக்களிலேயே இயற்கையாகவே விசேஷபாகம் ஜலம் கலந்திருப்பதுதான். கோதுமையிலும் 100-பங்குக்கு 15-பங்கு ஜலமிருக்கும். காய் பதார்த்தங்களில் இயற்கையாகவே ஜலம் கலந்திருப்பது நமக்குத் தெரிந்திருக்கிற தல்

லவா? இப்படிச் சொல்வானேன்? நமது தேகத்தில் மூன்றுபங்கு ஜலமிருப்பதாய்ச் சாஸ்திரமறிந்தோர் சொல்லுகிறார்கள்.

(1) ஆகையால் ஜலத்தின் முக்கியமான பிரயோசனம் நமது தாகத்தைத் தணிப்பது ; ஜீரணமாவதற்கு உதவியாகச் சரீரத்தை விருத்தி செய்வது; இன்னும் அநேக வேலைகளுக்கு ஜலம் உபயோகப்படும்.

(2) தேகத்தின்அழுக்கைப் போக்கடிப்பதற்கு ஸ்நானம் செய்வதைப் போல வேறொன்றுமில்லை. சமையல் பாத்திரங்கள் முதலியவைகளைச் சுத்திசெய்வதற்கு நாம் ஜலத்தை உபயோகிக்கிறோம்.

(3) தேசத்தின் சீதோஷ்ண ஸ்திதிகள் ஒருவாறு அவ்விடமிருக்கும் ஜலத்தின் பிரமாணத்தைப் பொருத்திருக்கும். ஒரு சிறிய தேசத்தைச் சுற்றி பெரிய சமுத்திரமிருக்கும்பக்ஷத்தில் இயற்கையாய் அத்தேசம் அதிக உஷ்ணமாயிருந்தபோதிலும் சுற்றிலுமிருக்கும் ஜலத்தினால் உஷ்ணம் குறைந்தேயிருக்கும். ஆனதினால்தான் நமது தேசத்தில் பலர் வெயிற்காலத்தில் சமுத்திரத்திற்கு அருகாமையிலுள்ள இடங்களுக்குச் சென்று வசிக்கிறார்கள். குளிர்காலத்தில் சமுத்திரத்தின் உஷ்ணம் வெளிப்பட்டு சமீபத்திலிருக்கும் ஜனங்களுக்குச் சௌக்கியத்தை உண்டாக்குகிறது.

ஜலத்தின் பேதங்கள். நாம் உபயோகிக்கும் ஜலத்தின் உருசியை அநுசரித்து இரண்டுவிதங்களென்று சொல்லலாம்.

(1) நல்ல ஜலம் (2) சமுத்திரஜலம் அல்லது உப்பு நீர்.

(1) நல்ல ஜலம்:—குடிப்பதற்கும், சமையலுக்கும் தினசரி ஸ்நானாதிகளுக்கும் உபயோகப்படும்.

(2) சமுத்திர ஜலம்:—சாதாரணமாய் உப்பாயிருக்கும் சில கிணற்று நீரும் சமுத்திர ஜலமும் குடிக்க உபயோகப்படாது. இது பாத்திரங்கள் முதலியவைகளைச்சுத்தி செய்வதற்கும் ஸ்நானத்திற்கும் உபயோகப்படும். ஆயினும் எப்போதும் உப்புநீரில் ஸ்நானம் செய்வது அவ்வளவு உசிதமன்று.

இன்னும் சில பேதங்களாவன:—ரூபத்தை யனுசரித்து இரண்டுவிதங்கள் ஏற்படுகின்றன. சில பிரதேசங்களில் ஜலம் பரிசுத்தமாயும் மற்ற சில விடங்களில் ஜலம் சுத்தமாயிராமல் சேறுகலங்கியுமிருக்கும். இதைத் தான் கலங்கினஜலம் என்று சொல்லுகிறோம். இம்மாதிரி நதியில் வெள்ளம் வரும்பொழுது ஜலம் கலங்கியிருப்பது நமக்குத் தெரிந்த விஷயமல்லவா? இந்த ஜலத்தை சமையல் முதலியவைகளுக்கு உபயோகப்படுத்தக்கூடாது.

(1) நல்ல ஜலம் தெளிவாகவிருக்கும். அப்படிக்கன்றி கலங்கியிருக்கும் பக்ஷத்தில் அது நல்ல ஜலமல்லவென்று நாம்எண்ணுகிறோம். (2) இயற்கையில் நல்ல ஜலத்திற்குவர்ணம் கிடையாது.

ஜலத்தின் குணங்கள். ஆழத்தில் ஜலமிருப்பதால் நதிகளின் ஜலம் கறுப்பு நிறமாயிருப்பதாக தோன்றுவதே யொழிய உண்மையாய் அதனிடத்தில் ஒருவித நிறமும் கிடையாது. இந்த உண்மையை அறிய விரும்புகிறவர்கள் அந்த ஜலத்தை ஒரு பாத்திரத்தில் போட்டுப்பார்த்தால் அதற்கு நிறமில்லை யென்றும், சுத்தமானதென்றும், நன்றாய்த் தெரியும், (3) காற்றிலிருக்குமநேக உபவாயுகளை (சில்லறைக் காற்றுகளை)யும், உஷ்ணத்தையும், துற்கந்தத்தையும், தன்மயமாக்கும் சக்தி அதற்கு உண்டு.

புத்தியுள்ள மனைவி.

செல்வஞ்சிறந்த இந்துதேசத்தின் தக்ஷணத்தில் மிகச்சிறப்புடையது தொண்டைநாடு. ஏன்? தொண்டைநாடு சான்றோர் இருக்குமிடம் அல்லவா? ஆயினும், நீர்க்கு நுரையும், நெல்லுக்கு உமியும், பூவிற்குப்புல்லிதழும் உண்டல்லவா? அம்மாதிரி, இவ்விதம் சிறந்தநாட்டின் ஓர்குக்கிராமம் உண்டு. அதில் **குருபாதம்** என்பவன்ஓர் வேளாளன். அவன் வேளாண்மைக்குணத்தில் குறையாது தீவினைவிட்டீட்டிய பொருளில், அன்னதானஞ் செய்தும் மற்றும் செய்யவேண்டியவைகளெல்லாம் செய்தும்வந்தான். விருந்தோம்பியுண்பான். புலத்தில் வித்து இடல்வேண்டுமோ என்னும் முதுமொழிப்படி செல்வமோங்கி, குருபாதம் மிக்க தனிகனானான். தற்கால நாகரீகப்படி தன் ஒரே மகனான **வேதாசலம்** என்பவனை ஆங்கிலேயபாஷை படிக்கவைத்தான். மற்றவர்களைப்போல் தன் மகனும் எப்பொழுது பி. ஏ. பரீட்சை கொடுப்பானோவென்று குருபாதம் எண்ணிக்கொண்டிருப்பான். வேதாசலம் பள்ளிக்கூடத்திற்குப்போய் மாலை வீடுவருவான். படிப்பு கொஞ்சமுங்கற்கவில்லை. சுருட்டு, பீடி, முதலியவைகள் பிடிக்க நன்றாய்ப் பழகிவிட்டான். மற்றுமுள்ள துர்விஷயங்களிலும் பிரவேசித்துவிட்டான். ஆனால் இவையெல்லாம் தன் பந்துக்களுக்குத் தெரியாமல் அதிரகசியமாய் நடந்துவந்தான்.

இவன் இப்படியிருக்க, அடுத்த கிராமத்திலுள்ள **சாம்பசிவன்** என்பவனுக்கு ஓர் பெண். பெயர் **அமிர்தம்**. பெயருக்குத்தக்க அழகும் குணமும் வாய்ந்தவள். படிப்பில்லாவிட்டாலும் இயற்கைபுத்தியும் யுக்தியுமுடையவள். பெருந்துக்கத்தையும்சாந்தமாகச் சகிப்பவள். ஏழைமையான குடும்பத்

தில் பிறந்தும் மிகவும் திருப்தியான மனமுடையவள். யாரிடத்திலும் இனியமொழி கூறுபவள். கோபமென்பது ஒரு விநாடியுங்கூடாதபடி ஒழுகுபவள்.

அமிர்தத்திற்கு நல்ல செல்வவானுன கண்வன் வரவேண்டுமென்பது தந்தை எண்ணம். தந்தைக்குக் கல்வி என்பது இன்னதென்று தெரியாது. வேதாசலத்திற்குக் கொடுத்துவிட்டால், தன் மகள் குறையின்றி வாழ்வாளென்பது சாம்பசிவத்தின் எண்ணம். செல்வமிருந்துங் கல்வியில்லாதவரை மணம் புரிந்து துன்பப்பட்டவர்கள் செய்தி சாம்பசிவனுணர்ந்தவனல்ல.

இது நிற்க, குருபாதம் தன் மகனுக்குக் கல்யாணஞ் செய்ய நிச்சயித்தான். பலபேருடைய ஜாதகங்களைப் புரோகிதர் கொண்டுவந்தார். கடைசியாய் பலர் ஆலோசனைமேல் அமிர்தத்தையே தன் மகனுக்குக்கொள்ள முடிவுசெய்யவே சாம்பசிவனும் உடன்பட்டான்.

கல்யாணகாரியங்கள் தயாராயின. குருபாதத்திற்கு கச்சேரி, பாணவேடிக்கை முதலிய பயனிலா விஷயங்கள் இஷ்டமில்லை. ஆனுல் தற்கால நாகரீகத்தைக்கண்ட வேதாசலம் படிப்பில் ஓங்காவிட்டாலும், மற்ற விஷயங்களில் தேர்ந்துவிட்டபடியால், ஆட்டக்கச்சேரி, பாட்டுக்கச்சேரி, புல்லாங்குழல், நாகசுரம் முதலிய கச்சேரி யேற்பாடெல்லாஞ் செய்து, பாணச் செலவிற்கும் ரூபா 400 எடுத்துவைத்துவிட்டான். எல்லா ஆடம்பரத்துடனும் மணம் மிகவும் சிறப்பாய் நடந்தேறியது.

கல்யாணகோலாகல மிப்படியிருக்க, வேதாசலத்தின் வைப்பாட்டி ரவாமணி செய்தி காணலாம். இவளுக்குவயது சுமார் 40இருக்கும். இவளோ அநேக மாடமாளிகையுடைய பலர்க்கு எளிதில் ஓடுகொடுத்த கெட்டிக்காரி. வேதாசலம் எவ்வளவு? ரவாமணி, கல்யாணமானவுடனே, வேதாசலத்தை மயக்கி அமிர்தத்தை முகமும் பார்க்கப்படாதெனத் திட்டஞ்செய்தாள். அதுகம் படித்து பி. எ., எம். எ., பரீட்சை செய்தவர்களும் பெண்களால் மயங்குவார்களானுல், வேதாசலம் மயங்காமற்போவானே? தாலிகட்டியதன் றிப் பிறகு அமிர்தத்தின்முகம்பார்த்ததில்லை. விஷமுண்ணப் பிறந்தோர்க்கு அமிர்தம் ஏற்குமோ?

அமிர்தமோ, கண்கலக்குற்றுள். என்னசெய்வாள், குழந்தை! வேதாசலம் வருவதற்குள் போஜனத்திற்கு வேண்டிய விஷயமெல்லாம் முடிப்பாள். புருஷன் வந்ததும் சாப்பாடு தயார்செய்து சாதத்தில் அன்னகுத்தியும், பதார்த்தக் கிண்ணங்களில் கரண்டியுமிட்டு ஒதுங்சி நிற்பாள். வேதாசலமும் உண்டு செல்வான்.

மனவாட்டத்தால் இப்படி சிலநாள் செல்ல, ஒருநாள் தன் சிநேகிதியாகிய மங்களத்துடன் வீட்டின் பின்னுள்ள தோட்டத்தில் அமிர்தம் தன் விதியை நொந்துகொண்டிருந்தாள். இப்படியிருக்கும்போது வேதாசலம் ஏதோ காரியமாய் அங்குவந்தான். இத்தருணத்தில் அங்கிருந்த ஒரு மல்லிகைக்கொடியில் ஓர் புஷ்பம்மலர்ந்திருந்தது. அதை மங்களம் பறித்து அமிர்தத்தின் கையில்கொடுத்தாள். அமிர்தம் அதைவாங்கி எறிந்துவிட்டு அங்கு உலர்ந்து கிடந்த ஓர் எருக்கம்பூவையெடுத்து மார்போடணைந்து, முகந்து, தலையில் சூட்டிக்கொண்டாள். மங்களம் உடனே 'அமிர்தா, உனக்கு நான் இன்று மலர்ந்த மல்லிகையைக்கொடுத்தால், அதை போட்டுவிட்டு, வாசனையில்லாததும் உலர்ந்ததுமான எருக்கம்பூவை முடித்து மகிழ்கிறாயே' என்றாள். அமிர்தம், துக்கமும் கோபமும்மேலிட்டு, 'அம்மா, மங்களம், உலகம் பித்துடையதென்று தெரியாதா. அமிர்தத்தைவிட்டு நஞ்சுண்பவர் எத்தனைபேர்? என்றாள். உடனே மங்களமும் 'ஆமாம், எத்தனைமூடர், இளவயதும் அழகுமுடைய தன் மனைவியைவிட்டு, அநேகர் தழுவிவாடிய கிழவிகளுடன் வாழவில்லையா. நீ செய்தது சரி' என்றாள்.

இவைகளையெல்லாம் பார்த்துக்கொண்டும் கேட்டுக்கொண்டும் இருந்த வேதாசலம், அன்றிரவு 12 மணிவரையில் தனியாய் உலாவி, தன் புத்தியில்லாதனத்தை எண்ணி, மிக வருத்தப்பட்டு, பனிரண்டுமணிக்குமேல், கொஞ்சம் நித்திரை செய்து பின்பு காலையில் 4—மணிக்கு எழுந்து " இனி நாம் நல்லவனாக நடக்க முயலவேண்டும், கெட்டவர்களுடன் சாகவாசம் செய்யக்கூடாது. இதுவரையிலும் நாம் செய்தது பிசகு. ஈசா! எனக்கு புத்திவந்தது என்னைமன்னித்து காத்தருளும். நான் இனி யோக்கியனாக என் அருமையானமனைவியுடன் வாழ்ந்துவருகிறேன்." என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு அன்றுமுதல்வேதாசலம் அமிர்தத்தைவிட்டு நீங்காமல், சத்காலக்ஷேபம் செய்துகொண்டு சுகமாக காலத்தைக் கழித்து வந்தான்.

"மதியால் எதையும் வெல்லலாம்."

போ. மங்கையர்க்கரசியம்மாள்.

மாயாபுரி வினோதக்கதை.

சிவசுவாமி ஐயரும், ஜகதீசனுங்கூடவே சென்றார்கள். அப்பொழுது தான் தன்னையழைத்துக்கொண்டு போகிறவள் தனது இன்னுயிர்த் தோழியாகிய முத்தம்மாளென்று தெரிந்துகொண்டு, முத்தம்மாள்! நீயா? ஆபத்துக்காலத்தில் சிநேகிதம்போலுதவுவதொன்றுமில்லை. தாழ்வடை

ந்தபோது சிநேகிதர்களே தாய், தகப்பன், அண்ணன், தம்பிகள்போலப் பயன் படுகிறார்கள். நீயிவ்விடமில்லாவிட்டால் நான் மிகவும் வருந்த நேரிடுமென்று சொல்லிக்கொண்டே வீட்டுக்கிட்டப்போம்பொழுது, முத்தம்மாள் கணவன் திண்ணையிலுட்கார்ந்துகொண்டு, முத்தம்மா! கதவைத் திறந்துபோட்டு எங்கேபோயிருந்தாயென்ன, சுவாமீ! இந்த அம்மாள் தான் நான் அடிக்கடி பேசுகிற விஜயலட்சுமி அம்மாள், ஐயரவர்கள் தான் விஜயலட்சுமி அம்மாள் கணவர், பையன் அவர்கள் குழந்தை; அவர்கள் வந்திருப்பதாகக் கேள்விப்பட்டுத் தங்களை முன்னிட்டுப்போயழைக்க நினைத்திருந்தேன். அதற்குள்ளாக நானே போயழைக்கும்படியானசந்தர்ப்பம் நேரிட்டபடியால் அவர்களையழைக்கப் போனேனென்று சொல்லிக்கொண்டே யுட்புகுந்தாள். முத்தம்மாள் கணவன் சுந்தர ஐயர் கேட்டுமுகமலர்ச்சியோடு அப்படியோ? அவர்களென்வீட்டுக்கு வந்தது நான் செய்ததவந்தான் என்று கூறி, அம்மாவாருங்கள், சுவாமி வாருங்கள், குழந்தாய்வா, என்றழைத்துக்கொண்டு வீட்டுக்குட்புகுந்தார். முத்தம்மாள் மணைகள் கொண்டுவந்துபோட அதின்மேல் சிவசுவாமி ஐயரவர்களை மரியாதையாகவிருக்கச்செய்து யோகக்ஷேமங்களை விசாரித்தபின் நாழிகையாய்விட்டது, சீக்கிரம் ஸ்நானஞ் செய்வோம் வாருங்கள், என்று இருவரும் வெந்நீரில் ஸ்நானஞ் செய்து, நித்தியகடன்களை முடித்துக்கொண்டு, பின் போஜனத்துக்கு வாருங்களென்றழைத்தார். ஐயரவர்கள் தமக்கு விசாலாட்சி வீட்டில் நேர்ந்த மானக்குறைவையேகருதி மதிமயங்கியிருந்தபடியால் வாய்திறவாமற்போயுட்கார்ந்தார். முத்தம்மாள் முன்பே ஒராளை விசாலாட்சிக்கனுப்பி "நீ சமைத்து நேரமாயிற்று, சாதமாறிப்போம், நீ சாப்பிட்டுவிடு, அவர்கள் ஸ்நானம், பூசைமுதலியசெய்ய நாழிகையாம், காத்திருக்கவேண்டாம்" என்று தெரிவித்தாள். விசாலாட்சியோ முன்னமே சாப்பிட்டுவிட்டு, மங்களாம்பாளுக்கும் போஜனஞ் செய்வித்து, அவர்கள் வரட்டும், அதுவரைக்கும் நாம் பட்டினியிருக்க முடியுமோவென்று சொல்லிக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். மங்களாம்பாள் சிறிய பெண்ணாகவிருந்தாலும், தாயார் செய்கை யவள் மனதுக்குத் திருப்தியில்லை. இதுதவறென்றே நினைத்துத் தானொன்றுஞ் செய்யக்கூடாமையால் மனம் வருந்தியிருந்தாள்.

இப்படியிருக்க, விஜயலட்சுமி வீட்டில் முன்பு வேலை செய்துகொண்டிருந்த கமலிகுமாரத்தி நாகம்மாள் இவ்வூரில் வாழ்க்கைப்பட்டிருந்தாளென்று முன்னமே சொன்னோமல்லவா? அவள் திடீரென்றுள்ளேவந்து நுழைந்து விசாலாட்சியம்மாள்! ஒரு ஆச்சரியங் கேட்டீர்களோ? விஜயலட்சுமியானவள் முத்தம்மாளோடுகூட அவள் வீட்டுக்குப்போனாள். போகும்

வழியில் முத்தம்மா! விசாலாட்சி யடைந்திருக்கிற பாக்கியமெல்ல ாமென் னுபகன் தயவினுலேதானென்பது நீ யறிந்த விஷயந்தானே. இப்பொழுது என்னைச் சிறிதும் மதிக்கவில்லை. தோழியாகிய நீ யிவ்வூரிலில்லாவிட்டால் நான் ஊருக்குத் திரும்பிப் போகவேண்டியதுதான். இவ்வூரிலிருக்க யோக்கியமில்லை. என்னைக் கவனியாவிட்டாலும், தனக்கிவ்வளவு செல்வந்தந்து சிறப்பில் வைத்த அண்ணாவையாவது மதிக்கவேண்டாமா? ஆகையால் அவள் வீட்டுக்குப்போக எனக்கு மனமில்லை. இன்றிருந்து விடியிற்காலம் புறப்பட்டு ஊருக்குப் போய்விடுகிறேனென்றுள். இங்கே யென்னநடந்தது, சொல்லுமம்மா வென்று வணக்கமாய்க் கேட்டாள். அது கேட்டவுடனே விசாலாட்சிக் காத்திரம் பிறந்து நாகம்மா! அவள் அப்படியோ சொன்னுள்? வெகு நன்றுயிருக்கிறது! நானிவளிடத்திற் பட்டபாடு தெய்வத்துக்குத்தான் தெரியும். இவளும், அண்ணுவுமெனக்கென்ன கொடுத்துவிட்டார்கள்? அண்ணு தான் மந்திரியாயிருந்த பெருமையினுலே என்னைத் திரும்பிப்பார்த்ததுண்டா? என்னை ஏழைக்குடும்பத்தில் கொடுத்துவிட்டுப் பிறகென்னை யொருதரமாவது திரும்பிப்பார்த்தானு? ஏதோ தெய்வகடாட்சத்தால் நான் முன்னுக்குவந்தது நீ யறியமாட்டாயோ? ஏன் கணவனெவ்வளவு கஷ்டப்பட்டுச் சம்பாதித்தார்? அதிருக்கட்டும். இவளுக்கு மரியாதையென்ன? தன்னுடைய நிலைமையை யோஜித்துப் பார்த்தாளா? வேளாளன் சோற்றைத்தின்றுகொண்டுஅவன் வீட்டில்உழைத்துக்கொண்டு ஜீவிக்கிற இவளுக்குப் பேச்சென்ன? இதை நாலுபேர் கேட்டாற் சிரிக்கமாட்டார்களா? வெட்கமில்லாமல் என் பெண்ணைக்கேட்கவந்தாளே! இவள் என்னிடத்தில் சம்பந்தஞ் செய்யத்தக்கவளோ? இவள் கணவன் முன்னே மந்திரியாயிருந்தபோது எல்லாருமடங்கியிருந்தார்களே அப்படியே இப்போதுமிருப்பார்களென்று நினைத்தாளோ? இப்பொழுது எல்லாருங்காறியுமிழ்வதறியாளோ! அரசனுக்கினைக்குட்பட்டுப் பயங்கொளித்துச் சீவிக்கிறதைப் பெருமையாக நினைத்துக்கொண்டாளோ ?இவளென்னைத் தூஷிக்கிறது நன்றுயிருக்கிறது. இவளென்வீட்டுக்கு வந்தாலென்ன? வாராவிட்டாலென்ன? எனக்கொருதாழ்வுமில்லையென்றுள். நாகம்மாள் அப்படியா? பெண்கேட்கவா வந்தாள்? வெகு நேர்த்தி; அம்மா! அவள் வாழ்ந்திருந்தபோது என்னையென்னபாடுபடுத்தினுள். என் தாயாரைப் படுத்தினபாடு கொஞ்சமோ? தலை கீழாகவிழுந்தாளே? அவளுடைய இறுமாப்புத் தெய்வத்துக்கே பொறுக்காமல் தெண்டித்தது. இன்னமும் புத்திவரவில்லை. அவள் கிடக்கிறுள். நாம் கவனிக்கவேண்டுவதில்லை. அவளால் நமக்காகவேண்டுவதென்னவிருக்கிறது. நான் வீட்டுக்குப்போய் வருகிறேன் என்று சொல்லிவிட்டு முத்தம்மாள் வீட்டுக்குப்புறப்பட்டாள்.

அப்பொழுது, முத்தம்மாள் வீட்டில் எல்லாரும் போஜனமருந்தித் தாம்பூலந்தரித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். நாகம்மாள் வந்து விஜயலட்சுமியைப் பார்த்து அம்மா எப்பொழுது வந்தீர்கள்! தங்கள்வருகையை முன்பேயறிவித்து வரக்கூடாதா? எனக்கிப்பொழுதுதான் தெரிந்தது என்று பக்கத்திலுட்கார்ந்தாள். முத்தம்மாள் கணவன் சிவசுவாமி ஐயரை நோக்கிச்சுவாமி! முத்தம்மாள் எப்போதும் விஜயலட்சுமிஅம்மாளையும், தங்களையும்பற்றிப் பேசிக்கொண்டேயிருக்கிறாள். நான் கல்யாணஞ்செய்துகொள்ளப் புஜங்காபுரி வந்திருந்தபோது சகலஜனங்களுந்தமது புகழையும், குணங்களையும் பேசிக்கொண்டிருந்தது கேட்டு மிகமகிழ்ந்து தம்மைப்பார்க்கவிரும்பினேன். என் துர்ப்பாக்கியங் கிட்டாமற்போயிற்று. தாங்கள் கொடுத்த பாக்கியத்தையே நானிப்போது அநுபவிக்கிறது. இன்று காலமேகூடத் தங்களைப்பற்றி முத்தம்மாள் ஞாபகப்படுத்தினாள். என்னுடைய நல்லகாலமின்று தரிசனங்கிடைத்தது.

தேவதுஞ்சரி அம்மாள்.

சென்ற மாதத்திய பத்திரிகையில் பவானியம்மாள் எழுதிய விடுகதைக்கு விடை.

(1) தேள்.
(2) மாமரம் அல்லது தென்னைமரம்.
(3) எலுமிச்சம்பழம்.
(4) கல்வி.
(5) வெற்றிலை.

சீதாலக்ஷுமி அம்மாள் எழுதியதற்கு விடை.

(1) எண்ணெய் செக்கு.

ராஜவேலு அம்மாள்.
வெங்கடலக்ஷுமி.

விடுகதை.

வருங்காலம் நிகழ்ந்துரைப்பான் சாஸ்திரியல்ல, வாங்கியுண்ண வழிபார்ப்பான் முடவனல்ல, சுரும்புமுதல் மலர்முடிப்பான் சுதனுமல்ல, தூளில் பசும்புல் சுமப்பான் தோட்டியல்ல, பருமுடல் நீறணிவான் பரமனல்ல, பலரில்லம் தான்புசிக்கும் பரதேசியல்ல, சிறந்தவன்னக் கிளிபோன்ற மொழியிகாளே, சீரான விக்கதையைச் செப்புவாயே.

ஓர் விப்பிரமாது.

(1) ஐந்துபேர் குண்டுருட்ட பதினறுபேர் தாங்க உள்ளே யொருவன் தள்ளடும் என்றுபோய் டுங் என்று வீழ.
(2) தம்பையின் கீழிருந்தவரே! பம்பரம்போலச் சுழன்றவரே அத்தை துடிக்க அய்யா துடிக்க யார்யார் வீட்டுக்குப்போனீரோ?
(3) ஓரகப்பைமாவில் ஊரெல்லாங் கலியாணம்.

நக்மணி அம்மாள்.

புஸ்தகவரவு (1) தீனதயாளு, (2) நாகானந்தம்.